# வினைத்திறனான கற்றல், கற்பித்தலில் முன்பள்ளி பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கம் மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

Tharshana Thevarajan

Temporary Assistant Lecturer, Department of Education And Child Care, Faculty Of Arts And Culture, Eastern University, Sri Lanka.

**ஆய்வுச் சுருக்கம்**

மனித ஆளுமையில் அடித்தளமிடப்படும் காலம் 0-5 வயதாகும். இக் கால கட்டத்தில் பிள்ளைகளுக்கு சரியானதும் பொருத்தமானதுமான கல்வி அனுபவம் கிடைக்குமிடத்தில் விரும்பத்தக்க பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள், விழுமியங்கள், திறன்கள், சுயசிந்தனை, திறனாய்வுகள் மற்றும் சமூக இசைவாக்கம் பெற்று மிளிர்வார்கள். பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியை வழங்குமிடமாக முன்பள்ளிகள் காணப்படுகின்றன. ஆய்விற்கு தெரிவு செய்த பிரதேசத்தில் முன்பள்ளிகள் பெயரளவில் இயங்குகின்றனவே தவிர வினைத்திறனாக இயங்காத நிலையிலே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக காணப்படுவது போதுமான வளங்கள் இன்மையாகும். இதன் காரணமாக முன்பள்ளி பாடசாலைகளின் வினைத்திறனான கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கத்தை அறிதல் எனும் பொது நோக்கில் இவ்வாய்வானது மண்முனை தென்மேற்கு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்றெுகின்றது. இவ் ஆய்விற்காக மண்முனை தென்மேற்கு பிரதேசத்திலுள்ள 08 முன்பள்ளிகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விசேட நோக்கத்திற்கேற்ப பெறப்பட்ட அளவு, பண்பு ரீதியான தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஆறை௨சழளழகவ நஓஉநட எனும் முறை பயன்படுத்தப்பட்டது. இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளாக மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் வகுப்பறை, நீர், மலசலகூட வசதிகள் காணப்படவில்லை. ஓரளவு பாதுகாப்பான சூழலில் முன்பள்ளி பாடசாலைகள் அமைந்து காணப்படுகின்றது. பாடசாலைகளுக்கு தேவையான பௌதீக வளங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. வினைத்திறனான கற்பித்தலை மேற்கொள்ளக் கூடிய வகையில் ஆசிரியர்கள் வாண்மைத்திறன் அற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுக்கு போதுமான பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. இவர்களை மேற்பார்வை செய்தல் குறைவாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான கையேடுகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. காலத்திற்கேற்ற வகையில் கற்பித்தல் முறைகளை மாற்றிக் கற்பிக்காத நிலை காணப்படுகின்றது. முன்பள்ளி ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் முன்பள்ளி பாடசாலைக்கு அருகிலுள்ள பாடசாலையில் தரம் 1ல் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் தொடர்பின்றி காணப்படுகின்றனர். கற்பித்தலுக்கு தேவையான உபகரணங்கள் போதாத நிலை காணப்படுகின்றது. ஆய்விற்காக தெரிவு செய்த பிரதேசத்தில் பௌதீக வளங்களை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடும் குறைவாக காணப்படுதல் போன்ற முடிவுகள் பெறப்பட்டன.

**அருஞ் சொற்பதங்கள்:** வினைத்தறனான கற்றல், வினைத்திறனான கற்பித்தல், முன்பள்ளி பாடசாலைகள், வளப்பற்றாக்குறைகள்